

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் தலைமையில் நேற்று (9.5.2025) திருச்சிராப்பள்ளி, பஞ்சப்பூரில் நடைபெற்ற அரசு விழாவில், ஜம்முகாஷ்மீர் ஆனந்த்நாக் மாவட்டத்தில் பஹல்காம் பகுதியில் நடந்த தீவிரவாத தாக்குதல் சம்பவத்தினாலும், பாகிஸ்தான் இராணுவத்தின் குண்டு வீச்சினாலும் இறந்த அப்பாவி மக்களுக்கு அஞ்சலி செலுத்தும் விதமாகவும், இந்திய இராணுவ வீரர்களுக்கு மரியாதை செலுத்தும் விதமாகவும் இவ்விழாவில் கலந்துகொண்ட அனைவரும் அமைதியாக ஒரு நிமிடம் எழுந்து நின்று வீர வணக்கம் செலுத்தினார்கள்.




தேனி வடக்கு மாவட்டம் போடியில் நாடு போற்றும் நான்காண்டு சாதனை விளக்க பொதுக்கூட்டம் நகரச் செயலாளர் புருஷோத்தமன் தலைமையில் நடைபெற்றது. கழக துணை பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. வடக்கு மாவட்டச் செயலாளர் தங்க தமிழ்ச்செல்வன் எம்.பி. ஆகியோர் சிறப்புரையாற்றினர். இந்த நிகழ்ச்சியில் உயர் நிலை செயல்திட்டக் குழு உறுப்பினர் எல்.மூக்கையா, மாவட்ட நிர்வாகிகள் மாநில நிர்வாகிகள், ஒன்றியச் செயலாளர்கள், நகரச் செயலாளர்கள், பேரூர் செயலாளர்கள், கழக மூத்த முன்னோடிகள் கலந்து கொண்டனர்.



மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று (09.05.2025) மாவட்ட பல்நோக்கு நடமாடும் கண் மருத்துவ பிரிவு வாகனத்தை கொடியசைத்து தொடங்கி வைத்து வாகனத்தில் உள்ள வசதிகள். கையடக்க விழித்திரை, புகைப்படக் கருவி. கணினிமுறை கண் பார்வை திறன் பரிசோதனை கருவிகளை தர்மபுரி மற்றும் மயிலாடுதுறை மாவட்ட திட்ட மேலாளர்களிடம் ஒப்படைத்தார்கள். இந்நிகழ்வில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அரசு முதன்மைச் செயலளார் முனைவர் ப.செந்தில்குமார். தேசிய நலவாழ்வு குழும இயக்குநர் மரு.அருண் தம்புராஜ், பொது சுகாதாரம் மற்றும் நோய்த்தடுப்பு மருந்துத்துறை இயக்குநர் மரு. செல்வவிநாயகம், மருத்துவக்கல்வி மற்றும் ஆராய்ச்சி இயக்குநர் மரு.சங்குமணி, தமிழ்நாடு பார்வை இழப்பு தடுப்பு சங்கம் திட்ட இயக்குநர் பேராசிரியர் டாக்டர் சந்திரகுமார் மற்றும் உயர் மருத்துவர்கள் உடனிருந்தனர்.

### ஜம்மு - காஷ்மீர் மாநிலத்தில் பயின்று வரும்

# 52 தமிழ்நாட்டு மாணவர்களை அழைத்து வர ஏற்பாடு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் நடவடிக்கை!

சென்னை, மே 10-

ஜம்முகாஷ்மீர் ஆனந்த்நாக் மாவட்டத்தில் பஹல்காம் பகுதியில் தீவிரவாத தாக்குதலால், தற்போது, இந்தியா - பாகிஸ்தான் இடையே போர் நிலவி வரும் சூழலில் ஜம்முகாஷ்மீரில் படித்துவரும் தமிழ்நாட்டு மாணவர்கள் குறித்து - தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் மேற்கொண்டுவரும் நடவடிக்கைகள் குறித்து அரசின் செய்திக் குறிப்பு வருமாறு:-

கடந்த 22.4.2025அன்று ஜம்முகாஷ்மீர் ஆனந்த்நாக் மாவட்டத்தில் பைசரான் பள்ளத்தாக்குப் பகுதியில் சுற்றுலாவிற்கு சென்றிருந்த பொது மக்கள் மீது தீவிரவாதிகள் திடீர் தாக்குதல் நடத்தினர்.

இதில் தமிழ்நாட்டைச் சேர்ந்த சிலர் பாதிக்கப் பட்டுள்ளதாக தகவல் கிடைக்கப் பெற்றவுடன், தமிழ்நாடு முதலமைச்சர் .மு.க.ஸ்டாலின் அவர்கள், தீவிரவாதிகளால் தாக்குதலுக்கு உள்ளான தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்களை பாதுகாக்கும் முகமாக அவர்கள் தொடர்பு கொள்ள ஏதுவாக புதுடில்லியில் உள்ள தமிழ்நாடு இல்லத்தில் சிறப்பு உதவி மையம் தொடங்க உத்தரவிட்டு, அதனடிப்படையில் உதவி மையம் தொடங்கப்பட்டு, 01124193300 (Landline), 9289516712 (Mobile Number with Whatsapp) என்ற எண்ணில் தொடர்பு கொள்ள வசதி ஏற்படுத்தப் பட்டது.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின் பேரில், 24 மணி நேரமும் செயல்படும் உதவி மையம் அமைக்கப்பட்டு, அவர்களின் தேவைகள் அறிந்து உடனுக்குடன் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டது.

இந்த நிலையில், தற்போது, தீவிரவாதிகளின் தாக்குதலைத் தொடர்ந்து இந்தியா பாகிஸ்தான் இடையே போர்ச் சூழல் ஏற்பட்டுள்ள நிலையில், ஜம்முகாஷ்மீரில் படித்துவரும் தமிழ்நாட்டைச் சார்ந்த 52 மாணவர்களின் பெற்றோர்கள் தங்களுடைய பிள்ளைகளை பாதுகாப்பாக தமிழ்நாட்டிற்கு அழைத்துவர வேண்டும் என்று முதலமைச்சர் அவர்களிடம் வேண்டுகோள் வைத்துள்ளார்கள்.

இந்த வேண்டுகோளுக்கு இணங்க, முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் அறிவுறுத்தலின்பேரில், சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் எஸ்.எம்.நாசர், புதுக்கோட்டை மாவட்ட கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) அப்தாப் ரசூல், ஆகியோர் அம்மாநில நிர்வாகத்துடன் ஒருங்கிணைந்து தொடர்ந்து பேசி, தமிழ்நாட்டு மாணவர்களின் பாதுகாப்பு உறுதி செய்யப்பட்டுள்ளது.

ஜம்மு காஷ்மீரில் தற்போது விமானச் சேவைகள் முற்றிலும் முடக்கி வைக்கப் பட்டுள்ள காரணத்தினாலும், அவர்களை சாலை வழியாக பாதுகாப்பாக அழைத்துவருவதற்கான சூழ்நிலை இல்லாத காரணத்தினாலும், தற்போதைய நிலைமை சீரானவுடன் ஜம்முகாஷ்மீர் மாநிலத்தில் பயின்று வரும் 52 தமிழ்நாட்டு மாணவர்களை மீண்டும் தமிழ்நாட்டிற்கு அழைத்துவருவதற்கான உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

இவ்வாறு அரசின் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

### மகப்பேறு இறப்பு விகிதத்தை குறைப்பதில்

# சிறப்பாகப் பணியாற்றிய மருத்துவர்களுக்கு விருதுகள்!

## அமைச்சர் மா.சுப்பிரமணியன் வழங்கினார்!

சென்னை, மே.10-

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று (09.05.2025) சென்னையில், மகப்பேறு இறப்புகளை குறைக்கும் விதமாக "Strategies on Reduction of MMR" பயிலரங்கத்தினை தொடங்கி வைத்தார்கள். பிறகு மகப்பேறு இறப்பு விகிதத்தை குறைப்பதில் சிறப்பாக பணியாற்றிய மருத்துவர்களுக்கு விருதுகளை வழங்கி விழா பேரூரையாற்றினார்கள். அவை வருமாறு:

மகப்பேறு இறப்புகளை குறைக்கும் விதமாக "Strategies on Reduction of MMR" பயிலரங்கம்

மகப்பேறு இறப்பு விகிதத்தை குறைப்பதில் உள்ள சவால்களை கையாள்வதற்கும், களப்பணியாளர்கள் எதிர்க்கொள்ளும் பிரச்சனைகளை புரிந்துகொள்வதற்கும், மருத்துவம் சார்ந்த அணுகுமுறைகள், கொள்கை சீர்திருத்தங்கள் மற்றும் சமூக பங்களிப்பு ஆகியவற்றை ஒருங்கிணைக்கும் விரிவான கருத்துகளை வழங்குவதற்காக "Strategies on Reduction of MMR" என்ற தலைப்பில் பயிலரங்கம் இன்று (09.05.2025) நடைபெறுகின்றது. இப்பயிலரங்கத்திற்கு, மாவட்ட அளவில் உள்ள அனைத்து சீமாங் மையங்களிலிருந்து 129 மகப்பேறு மருத்துவர்கள் கலந்துக்கொண்டனர். இதில் மகப்பேறு இறப்பு விகிதத்தைக் குறைப்பதில் சிறப்பாக பணியாற்றிய மருத்துவர்களுக்கு விருதுகள் வழங்கப்பட்டது. மகப்பேறு இறப்பு விகிதத்தைக் குறைப்பதில், ஒரு லட்சப் பிறப்புகளுக்கு 70 மகப்பேறு இறப்புகள் என்று நிர்ணயிக்கப்பட்டுள்ள இலக்கினை (Sustainable Development Goals) எட்டிய இந்தியாவின் சில மாநிலங்களில் தமிழ்நாடும் ஒன்றாகும். 202425 ஆண்டு சுகாதார கண்காணிப்பு தகவல் அறிக்கையின்படி தமிழ்நாட்டில் மகப்பேறு இறப்பு விகிதம் ஒரு லட்சம் பிறப்புகளுக்கு 39 ஆக குறைந்துள்ளது.

**மகப்பேறு இறப்புகளை குறைப்பதற்கான தமிழக அரசின் செயல்பாடுகள் :**

தமிழ்நாட்டில் 99.9% பிரசவங்கள் (8.02 லட்சம்) மருத்துவமனைகளில் நடைபெறுகின்றது. அவற்றுள் 56% (4.51 லட்சம்) பிரசவங்கள் அரசு மருத்துவமனைகளில் நடைபெறுகின்றது. அவற்றுள் 83% (3.54 லட்சம்) பிரசவங்கள் 129 சீமாங்க் மையங்களில் நடைபெற்றுள்ளது. பேறுகால சிக்கல்கள் உள்ள கர்ப்பிணி தாய்மார்கள் தொடர் கண்காணிப்பிற்கான திட்டத்தின் மூலம் கர்ப்பக்கால சிக்கல்கள் உள்ள கர்ப்பிணி தாய்மார்களை கண்டறிய ஒவ்வொரு மாதத்திலும் சிறப்பு முகாம்கள் நடத்தப்பட்டு, கர்ப்பக்கால சிக்கல்கள் உள்ள தாய்மார்களை கண்டறிந்து, மகப்பேறு மருத்துவர்கள் மூலம் ஆலோசனை மற்றும் சிகிச்சைகள் வழங்கப்படுகின்றது. கர்ப்பகால சிக்கல்கள் உள்ள தாய்மார்களை அதிக எண்ணிக்கைகளை கண்டறிந்த மாநிலம் என தமிழகத்திற்கு, ஒன்றிய அரசின் சுகாதார மற்றும் குடும்பநல அமைச்சகம் முதல் இடத்திற்கான விருது வழங்கியுள்ளது. அதிக எண்ணிக்கையில் மகப்பேறு பராமரிப்பு மையங்களை கொண்ட மாநிலங்களில், இரண்டாவது இடத்திற்கான விருதினை ஒன்றிய அரசின் சுகாதார மற்றும் குடும்பநல அமைச்சகம் தமிழகத்திற்கு வழங்கியுள்ளது. அனைத்து அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளிலும் கர்ப்பகாலம் மற்றும் பிரசவத்திற்கு பின் ஏற்படும் சிக்கல்கள் உள்ள தாய்மார்களுக்கு சிகிச்சை வழங்க நவீன கருவிகளுடன் கூடிய சிறப்பு பராமரிப்பு பிரிவு (High Depency Unit HDU) செயல்படுத்தப்பட்டுள்ளது. 91 CEmONC மையங்கள் லக்ஷ்யா (LaQshya) மையங்களாக அங்கீகரிக்கப்பட்டுள்ளன.

மருந்துக் கட்டுப்பாட்டுத் துறையுடன் ஒருங்கிணைந்து தனியார் மருந்தகங்களில் கருக் கலைப்பு மருந்துகளின் விற்பனை தடை செய்யப்பட்டுள்ளது. கர்ப்பக்காலம் மற்றும் குழந்தை கூட்டுக் கண்காணிப்பு மென்பொருள் (PICME) மூலம் பேறுகாலத்தில் தொடங்கி குழந்தையின் 18 வயது வரையிலான கர்ப்பிணிப் பெண்களின் விவரங்களைப் பதிவு செய்யப்படுகின்றது. கர்ப்பக்காலம் மற்றும் குழந்தை கூட்டுக் கண்காணிப்பு மென்பொருள் (PICME) மற்றும் 102 அழைப்பு சேவை மூலம் கர்ப்பகால சிக்கல்கள் உள்ள கர்ப்பிணிகள் மாநிலம் மற்றும் மாவட்ட அளவில் கண்காணிக்கப்படுகின்றனர். மேலும், அனைத்து அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை மற்றும் 800 தனியார் மருத்துவமனைகளில் மகப்பேறு கவனிப்பு சேவைகள் மற்றும் பிரசவ சேவைகள் பதிவு செய்து கண்காணிக்கப்படுகின்றது.

கர்ப்பிணி தாய்மார்கள் மற்றும் மிகவும் ஆபத்தான நிலையில் உள்ள நோயுற்ற குழந்தைகளுக்கு ஏற்படும் மருத்துவ செலவீனங்களைத் தவிர்க்க, கட்டணமில்லா மருந்து, உணவு, நோய் கண்டறிதல் ஆகிய சேவைகள் வழங்கப்பட்டுள்ளது. மேலும் வீட்டிலிருந்து மருத்துவமனைக்கும், மருத்துவமனையிலிருந்து பரிந்துரை மையங்களுக்கும் மற்றும் சிகிச்சைக்கு பின் வீட்டிற்கு அழைத்துச் செல்ல கட்டணமில்லா போக்குவரத்து சேவைகளும் வழங்கப்பட்டுவருகின்றது. கர்ப்பகால சிக்கல்கள் உள்ள கர்ப்பிணி பெண்கள் பிரசவிக்கும் மருத்துவமனையை சேவை அடிப்படையில் தேர்ந்தெடுக்க பிரத்யேக குழு (Pre Birth Planning Mechanism) நியமிக்கப்பட்டுள்ளது. மகப்பேறு இறப்பு விகிதத்தை குறைக்க மாநில மற்றும் மாவட்ட அளவில் (State and District Task Force Reduction of MMR) பணிக் குழு அமைக்கப்பட்டு அனைத்து மகப்பேறு மரணங்களும் ஆய்வு செய்யப்பட்டு வருகின்றது.

இவ்வாறு அமைச்சர்மா. சுப்பிரமணியன் விழா பேருரையாற்றினார்கள்.

இந்நிகழ்வில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அரசு முதன்மைச் செயலளார் முனைவர் ப.செந்தில்குமார், தேசிய நலவாழ்வு குழும இயக்குநர் மரு.அருண் தம்புராஜ், இ.ஆ.ப., மருத்துவக் கல்வி மற்றும் ஆராய்ச்சி கூடுதல் இயக்குநர் மரு.தேரணிராஜன், தேசிய நலவாழ்வு குழும ஆலோசகர் மரு. ஷோபா மற்றும் மருத்துவப் பேராசிரியர்கள், அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### சி.கே.வி.தமிழ்ச்செல்வன் தலைமை! எஸ்.சந்துரு வரவேற்புரை! க.செல்வம் எம்.பி. - சி.வி.எம்.பி. எழிலரசன் எம்.எல்.ஏ!

# காஞ்சிபுரம் மாநகரம் 2 வது பகுதியில் சாதனை விளக்க மாபெரும் பொதுக்கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ - சைதை பாஸ்கரன் - தே.சிலம்பரசன் சிறப்புரை!

காஞ்சிபுரம், மே.10,

காஞ்சிபுரம் தெற்கு மாவட்டம், காஞ்சிபுரம் மாநகரம் 2 வது பகுதிக் கழகம் சார்பில் கழகத் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் நாடு போற்றும் நான்காண்டு தொடரட்டும் பல்லாண்டு சாதனை விளக்கப் பொதுக் கூட்டம் இன்று (10.5.2025 சனிக்கிழமை) மாலை 6 மணிக்கு, யதோத்தகாரி பெருமாள் கோயில் சன்னதி தெரு, ரங்கசாமி குளம் அருகில், சின்னகாஞ்சி புரத்தில் நடைபெறுகின்றது.

கூட்டத்திற்கு மாநகரச் செயலாளர் சி.கே.வி. தமிழ்ச்செல்வன் தலைமை வகிக்கிறார். பகுதிச் செயலாளர் எஸ்.சந்துரு அனைவரையும் வரவேற்றுப் பேசுகிறார்.

கோ.எல்லப்பன், வி.கோவிந்த ராஜ், கே.சிவகுமார், ஜெ.நித்யா, வ.ராமமூர்த்தி, ஆர்.செந்தில் குமார், சீ.ஸ்ரீதர், ஆர்.வேல்முருகன், த.ரகு, எஸ்.சுகுமாரன்,ப. சுரேஷ் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

இக் கூட்டத்தில் மாவட்டக் கழகச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ, சிறுவேடல் க.செல்வம் எம்.பி., சி.வி.எம்.பி. எழிலரசன் எம்.எல்.ஏ., சைதை பாஸ்கரன், தே.சிலம்பரசன் ஆகியோர் சிறப்புரையாற்றுகின்றனர்.

மேலும் மேயர் எம்.மகாலட்சுமி யுவராஜ், சன்பிராண்ட் கே.ஆறுமுகம், எஸ்.கே.பி. சீனிவாசன், எஸ்.சிகாமணி, கே.ஏ.செங்குட்டுவன், ஏ.எஸ்.முத்துச்செல்வம், வ.ஜெகன்நாதன், பி.நிர்மலா, கு.சுப்பராயன்,அ.யுவராஜ், கே.திலகர், அ.தசரதன், சு.வெங்கடேன், ஜி.சுகுமாரன், தி.அன்பழகன், வி.எஸ்.ராமகிருஷ்ணன்,பெ.சுந்தரவரதன், ஜி.சசிகலா,எஸ்.கே.பி.சாந்தி சீனிவாசன், செவிலிமேடு எஸ்.மோகன், த.விஸ்வ நாதன், எஸ்.மால்லன், பி.சங்கர்,ஜெ.வரதராஜன், எஸ். சேகர், அ.பாலமுருகன் மற்றும் பலர் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர். 23வது வட்டச் செயலாளர் ஆர். முரளி நன்றி கூறுகிறார்.

### தா.மோகன்குமார் தலைமை! இரா. துரைராஜ் முன்னிலையில்

# சைதை கிழக்கு 168 அ வட்டத்தில் கழக அரசின் சாதனை விளக்க பொதுக்கூட்டம்!

## திண்டுக்கல் ஐ.லியோனி - சேது கருணாஸ் - அ.தா.டெக்சின் ரொமெரியோ - அமைச்சர் மா.சுப்பிரமணியன் சிறப்புரை!

சென்னை, மே 10

சென்னை தெற்கு மாவட்டம், சைதை கிழக்கு பகுதி 168வது (அ) வட்ட தி.மு.க சார்பில் நாடு போற்றும் நான்காண்டு தொடரட்டும் இது பல்லாண்டு எனவே கழக அரசின் ஐந்தாம் ஆண்டு தொடக்க விழாவினை முன்னிட்டு மாபெரும் பொதுக்கூட்டம் இன்று (10.05.2025 சனிக்கிழமை) மாலை 6 மணியளவில் ஈக்காட்டுதாங்கல், பூந்தமல்லி சாலையில் உள்ள கெங்கையம்மன் அம்மன் கோவில் அருகில் 168 (அ) வட்ட கழக செயலாளர், வார்டு மாமன்ற உறுப்பினருமான தா.மோகன்குமார் தலைமையிலும், சைதை கிழக்கு பகுதி செயலாளர், 13வது மண்டலக் குழு தலைவருமான இரா.துரைராஜ், சைதை மேற்கு பகுதி செயலாளரும், 10வது மண்டலக் குழு தலைவருமான எம்.கிருஷ்ணமூர்த்தி, 168வது வட்ட கழக செயலாளர் நா.ராதாகிருஷ்ணன் ஆகியோர் முன்னிலையிலும்,

பகுதி துணை செயலாளர் ஆர்.அருணகிரி, மாவட்ட பிரதிநிதிகள் ச.சேகர், டி.வி.நரசிம்மன், தொழிலாளர் அணி மாவட்ட தலைவர் ஆர்.டி. மூர்த்தி, வட்ட கழக நிர்வாகிகள் இ.சீனிவாசன், ஜி.என். நாராயணன், மீனாபரமானந்தம், என்.மேகநாதன், ஜி.வெங்கடேசன், டி,மனோகரன், எம். லிங்கேஷ்வரன், ஏ.என்.காளிஸ்வரன், எம்.ராஜி, எஸ்.அறிவானந்தம், எஸ்.தேவி, கு.வீராசாமி, கே.ராஜாராம், ஆர். குப்பன், கு.மோகன், ஈகை ராஜ்குமார் ஆகியோர் வரவேற்பில் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்திற்கு தமிழ்நாடு பாடநூல் தலைவரும், கழக கொள்கை பரப்பு செயலாளருமான திண்டுக்கல் ஐ.லியோனி, முக்குலத்தோர் புலிப்படைக் கட்சி தலைவர் சேது கருணாஸ், கழக இளம் பேச்சாளர் அ.தா.டெக்சின் ரொமேரியோ, சென்னை தெற்கு மாவட்ட கழக செயலாளரும், மருத்துவம் மற்றும் மக்கள்நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், தென்சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் முனைவர் தமிழச்சி தங்கபாண்டியன், பெருநகர சென்னை மாநகராட்சி துணை மேயர் மு.மகேஷ்குமார் ஆகியோர் சிறப்புரையாற்றுகி ன்றனர்.

இதில் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.அரவிந்த்ரமேஷ், காரம்பாக்கம் க.கணபதி, ஏ.எம்.வி.பிரபாகரராஜா ஆகியோர் சிறப்புரை ஆற்ற உள்ளனர். மேலும் இந்நிகழ்வில் க. தனசேகரன், பாலவாக்கம் க.சோமு, போரூர் எஸ்.அருணாசலம், வேளச்சேரி பி.மணிமாறன், கவிஞர் காசிமுத்துமாணிக்கம், மாவட்ட கழக நிர்வாகிகள் எஸ்.குணசேகரன், பாலவாக்கம் த.விஸ்வநாதன், பாலவாக்கம் மு.மனோகரன், வாசுகிபாண்டியன், வேளச்சேரி எஸ்.பாஸ்கரன், பகுதி ஒன்றிய கழக செயலாளர்கள் கே.கண்ணன், மு.இராசா, சு. சேகர், துரைகபிலன், எஸ்.வி. ரவிச்சந்திரன், வி.இ.மதியழன், நொளம்பூர் வே.ராஜன், கோவில்பாக்கம் ஜி.வெங்கடேசன், அ.ம.துரைவீரமணி, பொதுக்குழுஉறுப்பினர்கள், தலைமை கழக நிர்வாகிகள் மின்னல்கந்தப்பன், சைதைமா. அன்பரசன், வழக்கறிஞர்எம். ஸ்ரீதரன், ரத்னாலோகேஷ்வரன், எம்.எஸ்.ஹரிபாபு, சைதை கிழக்குமேற்கு பகுதி நிர்வாகிகள் இ.முருகேசன், ஆர்.ராஜ்குமார், மு.ஆரோக்கியம், மு.பாக்கியலட்சுமி, களக்காடிஎல்லப்பன், த.சம்பத், ஆர்.ரமேஷ், கவிதா கௌதமன், வி.பி.ஜானகிராமன், அணிகளின் அமைப்பாளர்கள் சைதைசாதிக். நா.மணி கண்டன், அஞ்சல்ராமன், கோ. பாஸ்கரன், கோட்டூர் எஸ்.பிரகாஷ், ஆர்.கிருஷ்ணகுமார்,


வட்ட கழக செயலாளர்கள் எல்.ஆரோக்கியராஜ், க.மணி, கோட்டூர் கோ.சண்முகம், நேருநகர்எஸ்.பாட்சா, எஸ். ஆர்.செந்தில், ஆ.வரதன், சை. மு சேகர், ந.தமிழரசு, எஸ்.பி. கோதண்டம், எம்.நாகா, அட்கோகமலநாதன், மாவட்ட பிரதிநிதிகள் என்.நந்தகோபால், எஸ்.ராதாகிருஷ்ணன், எஸ்.ஜெ.சலாம், க.உமாபதி, ஜி.யோவான், வே. முருகன், ஜி.செல்வராஜ், வே. ரமேஷ்குமார், இரா.சுதா பிரியன், கே.எம்.எஸ்.கணேசன், கோட்டூர் ந.பாபு, மு.மகேஷ் லாரன்ஸ், ஏ.மஜித், க.ஒப்பில்லா மணி, கு.புகழ்வேந்தன், டி.என்.சிவமணி, ஜி.கே.ராமச்சந்திரன், வீ.மதிவாணன், பொன்ஜெய்சிங், ஆர்.ரவி, பால்கார்ரவி, ஜி.பாபு,

மாவட்ட அணிகளின் துணை அமைப்பாளர்கள், பகுதி அமைப்பாளர்கள் க. வேல்முருகன், பி.செல்வம், ஜா.அகஸ்டின், கே.எஸ்.பாபு, ஈகை செல்வம், மோகன்தாஸ், பிரதாப், என்.சுதாகர், கோ. தனசேகரன், பார்சன்லோகு, எஸ்.எம்.ஷேக்தாவூத், ஜி.சி.ரவி ராஜ், ஆகாசம், தனுஷ், செந்தில்வேல், கதிர்வேல், மு.பாபு, குருமூர்த்தி, விமலநாதன், சபரி குமார், குப்புசாமி, இளைஞர் அணி நிர்வாகிகள் கொடி பாலா, மே.குணா, அருண்குமார், கோகுலன், பரத்குமார், ராஜாசம்பத், ஜிம்பிரபு, சுகுமார், தீபன், சத்யா, வெங்கடேசன், அருண், பரத்குமார், உள்ளிட்ட அணிகளின் பகுதி துணை அமைப்பாளர்கள், வட்ட செயற்குழு உறுப்பினர்கள், வட்ட இளைஞர் அணி நிர்வாகிகள், கழக முன்னோடிகள், பாகபொறுப்பாளர்கள், பாககளப்பணியாளர்கள், கழக செயல்வீரர்கள் ஆகியோர் பெருந்திரளாக பங்கேற்று சிறப்பிக்க உள்ளனர். கூட்டத்தின் நிறைவாக வட்ட துணை செயலாளர்கள் இ.தனசேகரன், த.பாண்டியன், ஆகியோர் நன்றி கூற உள்ளனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### மிசா வெ.மணிமொழி

### மே 10 (1993)



**கிராம தபால் நிலையத்தில் பணிபுரிந்த இவர், கழகக் கொள்கைமீது கொண்ட பற்றின் காரணமாக, தனது பணியை துறந்து, கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டவர்.**

**கழகத்தின் துவக்க காலத்தில் ஆலங்குடி பகுதியில் வட்டக் கழக பிரதிநிதியாக பொறுப்பு வகித்து கழக பணியாற்றியவர்.**

**ஊராட்சி மன்ற தலைவர், தொடக்க கூட்டுறவு வங்கி தலைவர், புதுக்கோட்டை மத்திய கூட்டுறவு வங்கி இயக்குநர், கூட்டுறவு ஒன்றிய பெருந்தலைவர் போன்ற பதவி வகித்தவர்.**

**நெருக்கடி கால மிசா சட்டத்தில் கைது செய்யப்பட்டு சிறை சென்றதோடு, தலைமைக் கழகம் அறிவித்த போராட்டங்களில் பங்கேற்று சிறை சென்றவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**